**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG10 – நிலை I (Grade 1)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜூலை–ஆகஸ்ட் 2021**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் <u>ஒரு சொல் / தொடரில்</u> விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10x1 = 10)**

1. திருவருட்பா என்னும் நூல் ஏறத்தாழ எத்தனைப் பாடல்களைக் கொண்டது?
2. உயிரே என்று முடியரசனார் குறிப்பிடுவது எதனை?
3. பண்புடையார் நட்பு பழகப் பழக தருவது எது?
4. நல்ல அறிவுரைகளை யாரிடம் கேட்க வேண்டும்?
5. 'நஞ்சு என்பதற்கு பொருள் என்ன?
6. இராமன் எத்துறையில் அறிஞர் ஆவார்?
7. தமிழ் மண்டபத்தில் இருந்த தூண்களின் எண்ணிக்கை எத்தனை?
8. சார்பெழுத்துகள் மொத்தம் எத்தனை?
9. மக்கள், தேவர் எத்திணையைச் சார்ந்தது?
10. 'ஊரே வந்தது' என்பதில் 'ஊரே' என்பது எப்பெயரைக் குறிப்பது?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் <u>பத்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>மூன்று வரிகளில்</u> விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. வள்ளலார் தம்மைப் பற்றி என்ன கூறுகிறார் ?
2. எது முழுமையான நட்பு என்கிறார் திருவள்ளுவர்?
3. குளிர்ந்த பொய்கையில் என்னென்ன இருந்ததாக திருநாவுக்கரசர் கூறுகிறார்?
4. சீறாப்புராணத்தை எழுதியவர் யார்? அவர் பிறந்த ஊர் எது?
5. முத்தொள்ளாயிரத்தின் மையக் கருத்தினை எழுதுக?
6. 'நஞ்சு உண்ட நாயக மூர்த்தி' என்ற பாடத்தில் இடம் பெறும் பெயர்கள் சிலவற்றைக் கூறுக.
7. 'தலைவாழை இலை உணவு' என்று எதற்குப் பெயர்?
8. காஞ்சிபுரத்திற்கு உள்ள இரண்டு சிறப்புகள் யாவை?

9. இராமன் கண்டுபிடிப்பின் பெயர் என்ன?
10. பதினாறுகால் மண்டபத்தைக் காப்பாற்றியவர்கள் யாவர்?
11. உயிர் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
12. மூன்று காலங்கள் எவை?
13. பெயர்ச்சொல்லின் வகைகள் யாவை?
14. பண்பாகு பெயரை விளக்குக?
15. வினைச்சொல் எவற்றைக் காட்டும்?

**பகுதி – இ**

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. திருவருட்பாவில் இறை வாழ்த்தின் மையக்கருத்தினை எழுதுக?
2. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் குறித்த கருத்துகள் மூன்று எழுதுக?
3. திருக்குறள்– சிறுகுறிப்பு எழுதுக?
4. 'நஞ்சு உண்ட நாயக மூர்த்தி' பாடத்தின் ஆசிரியர் குறிப்பை எழுதுக.
5. வாழைமரத்தின் பயன்கள் யாவை?
6. காஞ்சிபுரம் 'திருப்பருத்திக் குன்றம்' இடத்தைக் குறித்து எழுதுக.
7. சொல்லின் உறுப்புகளை எழுதி, அவற்றை விளக்குக.
8. தோன்றல் விகாரப் புணர்ச்சியை விளக்குக.

**பகுதி – ஈ**

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

*Answer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. 'அபிராமி அந்தாதி' யில் பாட அறிமுகம், பாடல் கருத்தினை எழுதுக.
2. காஞ்சிபுரத்தின் அழகை நும் பாடத்தின் வழி எழுதுக.
3. முதல் எழுத்துகள், சார்பெழுத்துகள் வகைகளை எழுதி விவரி.

**பகுதி – உ**

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

*Write an essay in three pages to any one of the questions.* **(1x15=15)**

1. நட்பு பற்றி திருவள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

2. புணர்ச்சி வகைகளை விளக்குக.

******